# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 17-12-61 | ஞாயிறு | இதழ் 27


## 'வழக்கறிஞர்

# ஜி. ஜி. எங்கே...?'

## கொலைவழக்கில் பரபரப்பு

### நீதியரசரின் கண்டனம்!

கொலைக்குற்ற வழக்கொன்றில் குற்றவாளிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்களான திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் திரு. சுனில் ரொட்ரிகோவும், நீதியரசர் திரு எச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. யினுல் பண்டாரவளை நீதிமன்றத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டனர். குற்றவாளிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்களான இவர்கள் மறுநாள் காரணம் எதுவும் காட்டாமலே நீதிமன்றத்துக்கு வராமல் இருந்துவிட்டனர். இதனைக் கண்ட நீதியரசர் "வழக்கறிஞர் எவ்வளவுதான் பிரபலமானவராயிருந்த போதிலும் நீதிமன்றத்தின் மதிப்பை பேணுவதில் நான் தவறமாட்டேன். இச் செயல் இந்த மன்றத்தையே உதாசீனம் செய்த செயலாகும். நாளையதினம் அவர்கள் இங்கே வருகை தந்து இன்று இங்கு பிரசன்னமாகாததன் காரணத்தை விளக்கவேண்டும்" என்று கூறினுர்.

திரு ஜி. ஜி. பொன்னம்பலத்திற்குப் பதிலாக ஆஜரான வழக்கறிஞரான திரு. ராசரத்தினம், பொன்னம்பலத்திற்குபதிலாக தான் ஏற்பட்டிருப்பதாகவும், பொன்னம்பலம் நீதிமன்றத்திற்குவராது விட்டது நீதிமன்றத்தை அவமதிக்கும்நோக்குடன் அல்லவென்றும், இதனுல் ஏற்பட்ட கஷ்டங்களுக்குத் தான் பொன்னம்பலத்தின் சார்பில் மன்னிப்புக் கோருவதாயும் கூறினுர்.

இந்த மன்னிப்பை ஏற்றுக்கொள்ள மறுத்த நீதியரசர், பொன்னம்பலமும் சுனில் ரொட்ரிகோவும் மறுநாள் நீதிமன்றத்திற்கு வருகை தந்து தங்கள் நிலைமைகளை விளக்கவேண்டும் என்று கட்டளையிட்டார். அவர்கள் நேரடியாக வந்து மன்னிப்புக் கோரும்பட்சத்தில், தான் அதனை ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்த அவர் மேற்குறித்த வழக்கறிஞர்கள் வரத்தவறும் பட்சத்தில் தான் இது விஷயத்தில் உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காக சுப்ரீம் கோர்ட்டுக்கு அறிவிக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

இதே வழக்கில் முன்னர் நடைபெற்ற விசாரணையின்போது சாட்சிகளை விசாரணை செய்தமுறை திருப்தி தராத காரணத்தினுல் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் பலமுறை நீதிபதியினுல் கண்டிக்கப்பட்டார்.

விசாரணையின்போது ஒருசமயம் சாட்சியான டாக்டர் செல்வரத்தினத்தைப் பார்த்து திரு ஜி. ஜி, பொன்னம்பலம், 'சாட்சி இதுவரை கூறிய மறுமொழிகளுள் இது ஒன்றுதான் புத்திசாலித்தனமானது' என்று குறிப்பிட்டபோது நீதியரசர், 'இந்த வார்த்தைகள் சாட்சியைப் புண்படுத்துவன' என்று கூறியதோடு 'இந்த முறையில் வழக்கறிஞர் நீதிமன்றத்துக்கு வெளியே பேசுவாராஞல் சாட்சி அவர்மீது மானநஷ்ட வழக்குத்தொடரவும் முடியும்' என்றும் குறிப்பிட்டார்.

## பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம்

# சமசமாஜ தலைவர்கள் மீது நடவடிக்கை?

வருகின்ற பிப்ரவரி மாதத்தில் அண்டவெளிக் கோளங்கள் பல ஒன்று சேரப்போவதாகவும், அதனுல் பல சங்கடங்கள் நிகழப்போவதாகவும் சோதிட நூல் வல்லார் பலர் கூறுகின்றனர்.

ஆனுல் அண்டவெளிக் கோளங்கள் சேரப்போகின்ற இந்த நேரத்தில் உள்நாட்டில் சேர்ந்து நின்ற கோளங்கள் ஒன்றையொன்றுவிட்டுப் பிரிந்து செல்லத் தொடங்கியுள்ளன. சுதந்திரக்கட்சி, சமசமாஜ—கம்யூனிஸ்ட் கோள்கள் ஒன்றையொன்று விட்டுப் பிரிந்து வெகுதூரம் செல்லக் கூடிய சாத்யக் கூறு இப்போது உருவாகியுள்ளது!

ஏற்கனவே சமசமாஜக் கட்சியிலுள்ள புரட்சிக் குழு, எட்மண்ட் சமரக்கொடி கோஷ்டியினர் நம்புகின்றனராம். சமசமாஜக் கட்சிக்குள் நடுநிலைமையாளர்களாக இருந்த அனில் முனசிங்கா குழுவினரும் சமரக்கொடி பக்கம் சாய்ந்துவிட்டதாகத் தெரியவருகிறது.

பஸ்தொழிலாளர் வேலை நிறுத்தம் காரணமாக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பலர் சமசமாஜக் கட்சி மீது வெறுப்பு அடைந்துள்ளதாகவும், சமசமாஜத் தலைவர்களைத் தடுப்புக் காவலில் வைக்கவேண்டுமென்று சொல்லுமளவுக்கு அந்த வெறுப்பு வளர்ந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

பொதுமக்களிடையே செல்வாக்குப்பெற்று 'மறுமலர்ச்சி' பெற்று வரும் யூ. என். பி. யின் பகைமை

### அண்டவெளிக் கிரகங்கள் கூடுகின்றன; அரசியல் கிரகங்கள் பிரிகின்றன!

யோடு, தொழிற்சங்கங்கள் பலவற்றை ஆட்டிப் படைக்கும் திறன் படைத்த சமசமாஜக் கட்சியின் பகைமையையும் சேர்த்துக்கொள்வது அரசியல் அறிவுடமை ஆகாது என்று சுதந்திரக் கட்சிக் 'கிழப் புலிகள்' கருதுகின்ற காரணத்தால்தான் அரசாங்கம் சமசமாஜத் தலைவர்கள் மீது நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருக்கிறதெனலாம்.

கொடி தலைமையில் சமசமாஜ—சுதந்திரக்கட்சி 'காதல் நாடகம்' முறியடிக்கப்பட வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

தற்போதுநிகழ்ந்து வரும் பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம் சுதந்திரக் கட்சி—சமசமாஜ கூட்டுறவை உடைத்தெறிவதற்கு பயன்படும் என்று சமரக்

### பஸ் ஓடுகிறது! —

"பஸ்தொழிலாளர்கள் தமது வேலை நிறுத்தத்தை நிறுத்தினுல்தான் ஏதாவது பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ள முடியும்!"

—பிரதமரின் 'பழைய' பல்லவி.

"வெள்ளிக்கிழமைக்குள் வேலைக்குத் திரும்பாத பஸ் தொழிலாளர்கள் அனைவரும் வேலை நீக்கம் செய்யப்படுவர்"

—போக்குவரத்து மந்திரியின் எச்சரிக்கை.

"தொழிலாளர்களின் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விட்டது! இன்றுமுதல் (வெள்ளிக்கிழமை) பஸ் வண்டிகள் ஓடும்"

—இலங்கை வானெலிச் செய்தி

—அந்தோ, பரிதாபம்!

# உங்கள் காலபலன்

## இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

**17-12-61 முதல் 23-12-61 வரை**

**மேடம்:** பிதாவழி பந்துக்களால், இந்தவாரத்தில் விசேஷ நன்மைகள் கிட்டும். நண்பர்களும் பலவிதத்தில் உதவி செய்வர். ஆனால் வேலைகள் அதிகமாக இருக்கும். புதிய பலபொறுப்புகளை ஏற்க நேரிடலாம்.

**இடபம்:** தேகநிலை திருப்திகரமாக இருக்காது குடும்பச் சச்சரவுகளும்காணப்படுகின்றன. ஆனால் தொழிலைப் பொறுத்தவரையில் முன்னேற்றங்களுண்டு. புதிய முயற்சிகள் தடைப்பட்டாலும் பின்பு வெற்றியைக் கொடுக்கும்.

**மிதுனம்:** குடும்பச் சூழ்நிலை தொடர்ந்து சிக்கலாகவே காணப்படுகிறது.மனைவிமக்களுக்குச் சுகவீனம் காணலாம், பல எதிர்ப்புகளையும் அபவாதங்களையும் ஏற்க நேரிடும். மனதில் அமைதி நிலவாது.

**கடகம்:** எதிர்ப்புகளையும் சத்துருக்களையும் சமாளித்து உங்கள் விஷயங்களில் முன்னேற்றங்காணமுடியும். ஆனால் குடும்பத்தில் சிறு சச்சரவுகளும், தேகசுகவீனமும் காணப்படுகின்றன.

**சிங்கம்:** மனதில் அமைதி நிலவாது. தேகசுகமும் பாதிக்கப்படும். வயிற்றில் நோய்கள் ஏற்படலாம். ஆனால் தொழிலைப் பொறுத்தவரை நல்லவாரம் சத்துருஜயமும் உண்டு.

**கன்னி:** ஞாயிறு திங்கள் வாரங்களையும் செவ்வாய் காலையையும் அவதானமாகச் செலவிடவும். உறவினருடன் விரோதங்களும், குடும்பச் சச்சரவுகளும் காணப்படுகின்றன. ஆனால் தொழிலைப் பொறுத்தவரையில் முன்னேற்றமுண்டு. பழைய முதலீடுகளாலும் லாபமுண்டு.

**துலாம்:** பொருள் விருத்தியுண்டு, அதிக பிரயாசையின்றியே நீங்கள் எடுத்த கருமங்களில் வெற்றிகாணமுடியும். ஆனால் செவ்வாய், புதன் வாரங்களையும், அவதானமாகச் செலவிடவும். உறவினருடன் சச்சரவுகளும், வாகனஞ்சிகளால் செலவும் காணப்படுகின்றன.

**விருச்சிகம்:** வார முதற்பகுதி தொழிலில் முன்னேற்றமுண்டு. கமத்தொழில்களாலும் லாபம் கிட்டும். ஆனால் வியாழன் பிற்பகலிலும், வெள்ளி, சனி வாரங்களும் சில சங்கடங்களைக்கொண்டு வரலாம்.

**தநுசு:** தேகசுகம் திருப்திகரமாக இருக்காது. சுரபயம் உண்டு. யோசனைகளும் அதிகமாக இருக்கும். ஆனால் தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிர்பார்த்திராத லாபங்கள் கிட்டும்.

**மகரம்:** உங்கள்விஷயங்களில் பலவித தடைகள் ஏற்படும். பிரச்சனைகளைத் தீர்ப்பது கஷ்டமாக இருக்கும். செலவினங்களும் அதிகமாகும். நண்பர் மூலமாகச் சிறு உதவிகள் கிட்டும்.

**கும்பம்:** சத்துரு ஜயம் உண்டு. தொழில் விசேஷ முன்னேற்றமுண்டு. ஆனால் இந்த வார இறுதிவரை குடும்பச் சிக்கல்கள் இருக்கும். உறவினருடனும் சிறு சச்சரவுகள் காணப்படுகின்றன.

**மீனம்:** மறுபடியும் ஒரு நல்ல வாரம். தொழிலில் முன்னேற்றமும் லாபமும்காணப்படுகின்றன, ஆனால் தேகசுகம் நன்றாக இருக்காது.


**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினால் உங்கள் ஒரு வருட கால பலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூபா 3-00 அனுப்பினால் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.



**சேலம்**

S. V. R. கண்டர் R. I. M. P. அவர்கள் தயாரிக்கும்

**வீரிய விர்த்தி மாத்திரை**

மிதமிஞ்சிய உஷ்ணத்தினாலும், அமிதபோகத்தினாலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறந்த வீரிய மாத்திரை.

24 மாத்திரைப்புட்டி ரூ. 7-00

**லேபனம் மெழுகு**

குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல், தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற் பூசும் மெழுகு.

1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00

தேவைக்கு எழுதவும்:

கன்னையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்

Prop: S. M. R. M. S.

ராக்லே பஜார், ஆன்க்குருனே. (சிலோன்) (P. O.)


# கண்டதும்... கேட்டதும்...

### "கோளறு பதிக" பாராயணம்.

வருகிற தைமாதம் 21ந் திகதி முதல் 23ந் திகதி முடிய எட்டுக் கிரகங்கள் மகர ராசியில் கூடுவதால் ஏற்படக்கூடிய பலவித இன்னல்களைத் தவிர்க்க திருஞான சம்பந்தப் பெருமான் அருளிச்செய்த தேவாரப் பதிகங்களில் "கோளறு பதிகம்" என வழங்கும் "வேயுறுதோழி பங்கன்" முதல் "தேனமர் பொழில் கொள் ஆலை" ஈறுகவுள்ள பதினொரு பாடல்களையும் மார்கழி மாதம் 1-ந் திகதி முதல் தைமாதம் 23-ந் திகதிவரை ஆலயங்களிலும் வீடுகளிலும் வானொலியிலும் பாராயணம் செய்து வரின் தீமை ஒழிந்து நன்மை பெறலாம் என்று ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமி அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்

சென்ற பத்து வருடங்களாகத் திருவெம்பாவைத் தினங்களில் அதிகாலையில் ஒலிபரப்பப்பட்டு வந்த திருவெம்பாவை நிகழ்ச்சிகளை பணக்கஷ்டம் காரணமாக இவ்வருடம் அஞ்சல் செய்வது சாத்தியமில்லையென்று சொல்லப்படும் போது "கோளறு பதிகம்" இலங்கை வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகுமென்றெதிர்பார்ப்பதற்கில்லை. திருச்சியும் சென்னையும் இக் கைங்கரியத்தைச் செய்தால் இலங்கையிலுள்ள நாமும் கோள்களுக்கு 'டிமிக்கி' கொடுத்து விடலாம்.

### "நாளும் கோளும் துணை நிற்கும்"

"தேவார பாராயணம் செய்வதால் கோள்களால் நேரக்கூடிய இன்னல்கள் நீங்கி விடுமா" என்று இன்றைய நாத்திக உலகம் நையாண்டிபண்ணக்கூடும்.

பாண்டி நாட்டில் சைவநெறி தழைக்கச் செய்வதற்காகச் சம்பந்தர் திருமறைக்காட்டிலிருந்து (வேதாரண்யம்) மதுரை புறப்பட்டபோது "இன்று நாளும்கோளும் நன்றாயில்லை. பயணம் புறப்பட்டால் நடு வழியில் சமணர்களால் துன்பம் நேரிடலாம்!" என்று உற்றோர் தடுத்தனர். அப்போது சம்பந்தர் அவர்களை நோக்கிச் சிவனருள் துணை நிற்கும்போது அடியார்க்கு நாளும் கோளும் துணை நிற்கத் தடையேது. என்று கேட்டுக்கொண்டே பாடிய பதிகம்தான் "கோளறு பதிகம்." அந்தப் பதிகம் பாடியதால் சம்பந்தர் சமணர்கள் இழைத்த இன்னல்களிலிருந்து தப்பியிருக்கும்போது நாங்கள் அந்த எட்டுக் கிரகங்களினதும் துட்டத்தனத்திலிருந்து தப்ப முடியாதா?

இன்று உலகம் போகிற போக்கைப் பார்த்தால் எட்டுக் கிரகங்களும் மகர ராசியில் கூடி உலகின் தலையை உருட்டத்தான் போகின்றன என்று தோன்றுகின்றது. இவ்வளவு நாளும் பஞ்சசீலத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருந்த இந்திய பிரதமர் நேருகூட சீனவைப் பார்த்து முறைக்கிறார். "உந்தச் சலசலப்புக்கெல்லாம் இந்தப் பனங்காட்டு நரி பயந்து விடாது" என்று சீனக்காரன் சவால் விடுகிறான். இந்திய-எல்லையிலும் போர்த்துக்கேயர் வாலை நீட்டி விஷமம் செய்கின்றார்கள். யுத்தம் மூண்டால் அப்புறம் உலகமே இருக்காது என்று ஸ்ரீநேரு எச்சரித்திருக்கிறார். மற்றவர்கள் எப்படிப் போனாலும் போகட்டும். இலங்கையிலுள்ள எங்களை யாரும் அசைக்க முடியாது என்று எண்ணி எங்கள் பாட்டுக்கு இருக்க முடிகிறதா? ஒருவருடகாலம் ஒருமாதிரியாக ஆட்சியைக் கொண்டிழுத்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை ஈ. போ. ச. ஊழியர்கள் வேலைநிறுத்த ஆயுதம் கொண்டு பயமுறுத்தத் தொடங்கியிருக்கின்றார்கள்.

### வேலை நிறுத்தம் செய்வதற்கு வேலைநீக்கமில்லையா?

இ. போ. ச. ஊழியர்களை எவ்வெக் காரணங்களுக்கெல்லாம் வேலை நீக்கம் செய்ய முடியுமென்பதை விளக்கி சகல ஈ.போ. ச. டிப்போமனேச்சர்மார்களுக்கும் இ. போ. ச. தலைவர் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி வைக்கப்போக பஸ்களெல்லாம் தெருக்களில் ஓடாமல் டிப்போக்களிலேயே குந்திக்கொண்டன. வேலைத்தலங்களுக்கும், கந்தோர்களுக்கும், கடை கண்ணிக்கும் செல்லும் பல்லாயிரக்கணக்கான மக்களும் ஜீ. ஸீ. ஈ. சோதனை எடுக்கும் ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகளும் தத்தம் யதாஸ்தானங்களுக்குப்போய்ச்சேரமுடியாது திண்டாடித் தவிக்கின்றனர்.

"ஏன் அப்பா! இப்படித் திடீரென்று வேலை நிறுத்தம் செய்து எங்களையெல்லாம் நடுத் தெருவில் நிற்கச் செய்திருக்கிறீர்?" என்று ஒரு பஸ் ஊழியரை வினவினேன். அதற்கு அவர் தங்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ள வேலைநீக்கத்துக்கான "திடீர் வேலை நிறுத்தம்" சேர்க்கப்படவில்லையென்றும், திடீர்வேலை நிறுத்தத்துக்கு என்ன தண்டனை என்பதை பார்ப்பதற்காகவே தாங்கள் 'நோட்டீஸ்' கூடக்கொடுக்காமல் 'ஸ்ட்ரைக்' பண்ணியிருப்பதாகவும் சொன்னார். அபீஸருக்கு 'லேட்' டாகப் போனால் "எடிட்டர்" மென்னியைப் பிடித்து வெளியே தள்ளுவாரே யென்று பயந்துகொண்டிருந்த எனக்கு அவருடைய ஹாஸ்யத்தை ரசிக்க முடியுமா?

### 'டாக்ஸி'களுக்கு நல்ல கிராக்கி.

பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தாலும் செய்தார்கள் 'டாக்ஸி'க் காரர் பாடு ஒரே கொண்டாட்டம். பஸ்ஸில் ஏறி ஜனக்கும்பலோடு இரண்டறக் கலந்து 'கொண்டக்டருக்கு' டிமிக்கி கொடுத்து டிக்கட் வாங்காமல் ஐந்து, பத்து சதத்தை மிதப்படுத்தி, மெதுவாக நழுவும் ஆசாமிகள் கூட பஸ் போக்கு வரத்து நின்றதும் டாக்ஸியில் சவாரி செய்யும் போது எனக்கு டாக்ஸி கிடைக்குமா? பெரிய பெரிய கார் வைத்திருக்கும் பணக்காரர்கள் தட்டத்தனிய 'ஜம்' என்று போகிறார்கள். போவதற்கு பஸ்ஸும் இல்லாமல் டாக்ஸியில் செல்வதற்கு காசுமில்லாமல் திண்டாடும் என்போன்றவர்களுக்கு அவர்கள் செல்லும் கார்களில் 'லிப்ட்' தந்தால் குடி முழுகியா போய்விடும்!

வேலை நிறுத்தத்தால் பொதுஜனங்களுக்கு பொழுதும் பொருளும் வீண் விரயமாயினும் பஸ் ஊழியர்கள் மீது அவர்கள் சீற்றங்கொள்ளவில்லை. தேசீய அபிவிருத்தி வரியின் பெயரால் எங்கள் சம்பளத்தில் கைவைத்த அரசாங்கத்துக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்." என்று கூறி காசுள்ளவர்கள் 'டாக்ஸி'களிலும் அது இல்லாதவர்கள் நடந்தும் தாங்கள் போக வேண்டிய இடங்களுக்குப் போகின்றார்கள்.

(6 ம் பக்கம் பார்க்க)

## வானவெளிப் பிரயாணி,
# ககாரினுக்கு சுகயீனம் ஏற்பட்டதா?
## உள்ளூர்ப்பத்திரிகைகள் அமெரிக்காவிடம் வாங்கிய புழுகு மூட்டை!

''ஆஹா, என்ன அழகான ஆண்பிள்ளை!''

''அழகு மட்டும் இல்லையப்பா, எத்தனை இளமை பார்த்தாயா?''

''சந்திர மண்டலத்திற்கே போய்விட்டு வந்து விட்டாராமே!''

முட்டாள் தனமாகப்பேசாதே. சந்திரமண்டலத்திற்குப் போகவில்லை, வானவெளியைச் சுற்றிவந்திருக்கிறார்!''

''முருகப் பெருமானுக்கும், பிள்ளையாருக்கும் ஏற்பட்ட மாம்பழத் தகராறில், முருகன் மயில்வாகனத்தில் ஏறி உலகத்தைச் சுற்றிவரப் புறப்பட்டதாகவும், பிள்ளையார் பெருச்சாளி வாகனத்தில் ஏறி......''

''ஏது, புராணத்தில் படித்த விஷயத்தைவைத்துக்கொண்டு கதை அளக்கிறாய் போலிருக்கிறது. இந்த ரஷ்யாக்காரன் உண்மையிலேயே வானவெளியின் ஊடாக உலகத்தையே பவனி வந்திருக்கிறானப்பா!''

''உண்மையிலேயே இந்த ககாரின் ரஷ்யாக்காரர்தானா?''

''ஏன் அதில் உனக்குத் திடீர் சந்தேகம் வந்து விட்டது?''

''எனக்கு என்னமோ சந்தேகமாகத்தான் இருக்கிறது. உண்மையிலேயேரஷ்யாக்காரன் என்றால் இப்படி இருக்கமாட்டான்''

''பின்னே எப்படி இருப்பான்?''

''ககாரின் 'கிளீன் ஷேவ்' செய்துகொண்டு பார்ப்பதற்கு இவ்வளவு அழகாக இருக்கிறாரே? ரஷ்யாக்காரன் செம்பட்டை மீசையும், தாடியுமாக வல்லவா இருப்பான்? அத்தோடே அவன் கால்சட்டைப் பைக்குள் எப்பொழுதும் குண்டு இருக்குமே.........! குண்டு இல்லாமல் ரஷ்யாக்காரன் வெளியேறவே மாட்டானே?''

''இதை யாரடாப்பா உனக்குச் சொன்னது?''

''புத்தகத்திலேபடித்தேன்''

''என்ன புத்தகம்?''

''ஏதோ ஒரு புத்தகம். எனக்கு ஞாபகமில்லை. ஆனால்இது உண்மையிலேயே ககாரின்என்று என்னால் நம்பமுடியவில்லை''

''அப்படியானால் 'ககாகிரீன்' என்று வைத்துக் கொள்ளேன்!''

''என்ன, கிரீனா?... 'கிரீன்' என்றால் பச்சை என்றல்லவா அர்த்தம்? ரஷ்யாக்காரர்களின் நிறம் சிவப்பல்லவா?''

''அதெல்லாம் இருக்கட்டும். நீ ஏன் இவரை ககாரின்என்று நம்பமறுக்கிறாய்?''

''ககாரினுக்குத்தான் சுகமில்லையாமே? அவர் வானவெளிப்பிரயாணம் செய்து விட்டு வந்த பிறகு ஏதோ பக்கவாதமோ என்னமோ ஒரு வியாதி வந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதாகப் பத்திரிகையில் படித்தேன்?''

எந்தப் பத்திரிகையில் படித்தாய்?''

''எல்லாம் நம் இலங்கைப் பத்திரிகையில் தான்''

''நம் இலங்கைப் பத்திரிகைக் காரர்களுக்கு அவருக்கு வந்திருக்கும் வியாதியைப்பற்றி எப்படித் தெரியுமாம்?''

''ஏதோ ஒரு அமெரிக்க பத்திரிகையில் வெளிவந்திருந்த செய்தியை இவர்கள் பிரசுரித்தார்களாம். அப்படியானால் அது உண்மையாகத்தானே இருக்கவேண்டும்?''

''ஓஹோ!...அமெரிக்கப்பத்திரிகையில் வெளியானசெய்தியென்றவுடன் அது உண்மையாகிவிடுமா? அமெரிக்காக்காரர்கள் மாத்திரம் என்ன பொய்சொல்லாத'தேவதைக்குஞ்சு' களா?....அது சரி, ரஷ்யாவில் நடக்கும் விஷயம் இவர்களுக்கு எப்படித் தெரிந்ததாம்?''

''நல்ல கேள்விதான் கேட்டாய் போ, பயித்தியகாரக் கேள்வி! அமெரிக்கர்கள் என்ன சாமானியப் பட்டவர்களா? அவர்களுக்குத் தெரியா விஷயமும் இருக்கவா செய்கிறது? அமெரிக்கர்கள் மட்டும் ரஷ்யாக்காரர்களைவிடச் சளைத்தவர்களா என்ன? அவர்கள்மட்டும் என்ன வானவெளியைப்பற்றி ஆராய்ச்சி செய்யவில்லையா?''

''ஆமாம், செய்தார்கள் யார் இல்லையென்றார்கள்? ஒரு முறை வானவெளிப் பிரயாணத்தை அமோகமாகத் தொடங்கிய ஒரு அமெரிக்காக்காரர் அடுத்த பத்து நிமிடங்களில் கடலுக்கடியிலிருந்து வெளிப்பட்டாரே .... அதைச் சொல்லுகிறாயா?''

''இல்லை ககாரினைப்போல் வானவெளிப் பிரயாணம் செய்ததைப் பற்றித்தான் சொல்லுகிறேன்''

''ஓஹோ, அதைச் சொல்லுகிறாயா? அப்படியானால் ககாரினுக்குக் கொடுத்த இதே வரவேற்பை அந்த அமெரிக்க ஆசாமிக்கும் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறாய். அப்படித்தானே''?

''ஆமாம். அவர் பெயர் என்ன?...''

''எவர் பெயர்?...அமெரிக்கர் முதலில் ஒரு குரங்கையல்லவா வானவெளிக்கு அனுப்பினார்கள்?...ரஷ்யாக்காரன் தான் துணிந்தவன். அவன்தான் மனிதனை வானவெளிக்கு அனுப்பினான். அந்த மனிதன் தான் இந்த ககாரின். அவர் வானவெளியின் ஊடாக உலகத்தைச் சுற்றி வந்ததற்காகத் தான் இத்தனை கோலாகல வரவேற்பு......''

''போதுமப்பா போதும்!... அதுசரி, ககாரின் கம்யூனிஸ்ட்காரர்தானே?''

''பொதுவாக ரஷ்யாக்காரர்கள் எல்லோருமே கம்யூனிஸ்டுகள்தான். ஏன் அப்படிக் கேட்கிறாய்?''

''இல்லை, நம் உள்ளூர் கம்யூனிஸ்ட் காரர்கள் அப்படி ஒன்றும் பிரமாதமான ஆர்ப்பாட்டம்ஒன்றும் செய்யவில்லையே, அதனால்தான்......''

''நன்றாக இருக்கிறதப்பா உன் கேள்வி!...கம்யூனிஸ்ட்டுகள் என்றால் என்ன? அவர்களும் மனிதர்கள்தானே? ககாரின் ரஷ்யனாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு கம்யூனிஸ்டாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, ஒரு பெரும் சாதனையைச் சாதித்த'மனிதன்' என்ற முறையில் மனிதகுலமே பெருமைப்பட வேண்டும்!''

''அது சரி, ககாரின்தானே உலக சாதனையைச் சாதித்தார்? அவரைப் பார்ப்பதற்காகத் தானே நாம் எல்லாம் இங்கு கூடியிருக்கிறோம்? நம் கல்வி மந்திரி என்ன சாதனையைச் சாதித்து விட்டார்? அவரும் ககாரின் கூட நின்றுகொண்டு காரில் பவனிவருவதைப்பார்க்கும்பொழுது .......''

''உஸ்....அதைப்பற்றியெல்லாம் இப்பொழுது பேசி ஏன் பொழுதை வீணாக்குகிறாய்? அதெல்லாம் பெரிய இடத்து விவகாரம் ..''


**சாந்த பவான்**

(சுத்த சைவ உணவு விடுதி)

- சகல வசதிகளுடன் தங்குவதற்கு அறைகள்
- அறுசுவை மிக்க சுத்த போசனம்
- விருந்துபசாரங்களுக்குப் போதிய இடம்
- விசேஷ ஆடர்கள் குறுகியகாலத்தில் கவனிப்பு

எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற இடம்

**சாந்த பவான்**

121, மலேவீதி — கொழும்பு 2.




## வேலுப்பிள்ளை மாஸ்டரின் திருகுதாளங்கள்!

### சொந்தஊருக்கு மாறியகதை.

வேலுப்பிள்ளை மாஸ்டர்ஒருபடியாக அந்தத்தீவுப் பள்ளிக்கூடத்தைவிட்டுக் கிளம்பினார். தான் அந்தக் கஷ்டமான தீவிலே பலவருடங்களைக் கழித்துவிட்டதால் இனி தமது சொந்த ஊருக்குக் கிட்ட மாற்றந்தரவேணுமென்று மனேச்சரிடம் மல்லுக் கட்டினார். அந்தக் 'கஷ்டமான' தீவிலேஇவர் எப்படிக் காலந் தள்ளினாரென்பது மனேச்சருக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். ஆனாலும் 'இவன் பாவி ஒரே பழிகிடையாகக் கிடந்து காலைப் பிடிக்கிறானே' என்று கருதி, ஒரு மாதிரி இவருடைய சொந்த ஊரிலிருந்து ஐந்தாறு மைல் தூரத்திலுள்ள ஒருபாடசாலையில் இடம் கொடுத்தார். அதற்கும் வேலுப்பிள்ளை மாஸ்டர் முணுமுணுத்துப் பார்த்தார். 'ஓய், நீர் சைக்கிளில் போய்வரத் தக்கதாக இடம் தந்திருக்கிறேன். இனி உம்முடைய வீட்டு முத்தத்திலைதான் உமக்கு பள்ளிக்கூடம் கட்டித் தரவேணும்போலை?' என்று மனேச்சர் சீறி விழுந்தார். வேலுப்பிள்ளை மாஸ்டருக்கு மனதுக்குள் ஆத்திரந்தான். என்றாலும் என்ன செய்கிறது? 'இந்தப் படுபாவியோடு மிண்டிக்கொண்டால் கட்டையிலே போகும் வரையும் கரைச்சல் தான்' என்பது அவருக்குத் தெரியும். ஆகவே ''என்னவோ ஐயா உங்களின்ரை சொல்லை நான் இந்தச் சென்மத்திலே தட்டி நடக்கப்போறதில்லை. நீங்கள் போட்ட பிச்சை தான். உங்களின்ரை கட்டளைப்படி இப்ப போறன். அடுத்த வருஷமெண்டாலும் என்னை ஊரோடை விட்டுவிட வேணும்!'' என்று சொல்லித் தமது வழக்கமான கூழைக் கும்பிடு ஒன்றைப் போட்டு விட்டுத் திரும்பி வந்தார்.

இந்தச் சமயத்தில்தான் எங்கள் இலங்கா துவீபத்தில் ஒரு புரட்சி உண்டாயிற்று. விளையாட்டுப் பேச்சுப்போல் தோன்றிய 'பாடசாலைகளைத் தேசிய மயமாக்கும் திட்டம்' உண்மையாகவே உருக்கொண்டு வந்தது. .வேலுப்பிள்ளைமாஸ்டரும் தம்முடைய சீவியத்தில் சொந்தமாகப் பணம் கொடுத்து நாலைந்துநாள் பத்திரிகை வாங்கிப் படித்தார். எல்லாப் பள்ளிக்கூடங்களையும் அரசாங்கம் எடுக்கத்தான் போகிறதென்பதை ஐயந்திரிபறவிளங்கிக்கொண்டு ஒரு பெருமூச்சு விட்டார். அந்தப் பெருமூச்சுடன் 'ஜென்மாதி ஜென்மத்துக்கும் மனேச்சரின் கீழ்ப்படிவும் பணிவுமுள்ள ஊழியன்' என்ற எண்ணத்தையும் தமது நெஞ்சிலிருந்து வெளியே ஊதித் தள்ளினார். பேனையையும் கடுதாசியையும் எடுத்தார்.— பயப்படாதீர்கள், அவர் ஒன்றும் எழுதவில்லை. விஷயம் விளங்கிய ஒரு 'வாத்திப் பொடிய'னிடம் போய், 'தம்பி நீதான்ரா சரியான ஆள். ஒருநல்ல பெட்டிசம் எழுது' என்றார்.

நல்ல வெள்ளை 'புல்ஸ்காப்' பேப்பரில் அழகாக ஆங்கிலத்தில் 'டைப்' அடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக் கடிதங்கள் கல்விப்பகுதித் தலைமை அலுவலகத்திற்கு பறந்து சென்றன. அவற்றின் பின்னாலேயே வேலுப்பிள்ளை மாஸ்டரும் அந்த வாத்திப்பொடியனைக் கூட்டிக்கொண்டு கொழும்புக்குப்போனார். அங்கே அவரை இவரைப் பிடித்து காணவேண்டியவர்களை முறைப்படி கண்டு, தமக்கு மனேச்சர் செய்த அநியாயத்தை—ஐந்து வருடகாலம்கஷ்டம் நிறைந்த தீவிலே போட்டு உலைத்துவிட்டு,பிறகும்ஊரோடுவிடாத கொடுமையை எடுத்துரைத்தார் அவருடைய 'நியாயங்கள்' எடுபடாவிட்டாலும், செய்யவேண்டிய கருமாதிகள் ஒழுங்காகச் செய்யப்பட்டதால் அந்தச் செய்வினைகள் வேலை செய்தன.

தம்முடைய வீட்டு முற்றத்திலே பள்ளிக் கூடத்தை வைத்திராதுவிட்டாலும் அடுத்த வளவிலே யாவது வைத்திருக்கும் வாய்ப்புக் கிடைத்தது வேலுப்பிள்ளை மாஸ்டருக்கு.

எல்லை வேலியில் ஒரு 'கடப்'பை வைத்துக்கொண்டதும் போக்குவரத்து வசதியும் மிக முன்னேற்றமடைந்தது.

இதன் பிறகு பள்ளிக்கூடமே வீடாகவும், வீடே பள்ளிக்கூடமாகவும் அவர் கடமையாற்றிவரும் நாளில்—

—''ஆவன்னா''

# எவருக்கோ சொன்ன பதில்......

கே: திருமணம் என்றால் என்ன?

ப: பகிரங்க விளம்பரம் செய்து, ஒருத்திக்கும், ஒருவனுக்கும் 'தவறு' செய்ய அனுமதிச்சீட்டுத் தரும்நிகழ்ச்சி!

—கலைமன்றம்.

கே; வரும் பொதுத் தேர்தலில் அண்ணுதுரை தோற்று விடுவார் என்று ஈ. வே. ரா. ஜோஸ்யம் கூறியிருக்கிறாரே, அவர் ஜெயித்துவிட்டால் பெரியார் என்ன செய்வார்?

ப: 'ஜோஸ்யமாவது வெங்காயமாவது! அதெல்லாம் சுத்த ஹம்பக்!" என்று சொல்வார். — ஆனந்த விகடன்.

கே: முஸ்லிம்கள் இஸ்லாமிய சட்டப்படி வேட்டி உடுத்தலாமா? கூடாதா?

ப: ஒழுங்கான முறையில், மறைவாக இருக்க வேண்டிய மனித உறுப்புகள் தெரியாதவண்ணம் உடுத்தலாம்.

—முஸ்லிம் முரசு.

கே: குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்கிறார்களே, நம்பலாமா?

ப: சில அரசியல் வாதிகளைப் பார்த்தால் நம்பத்தானே வேண்டியிருக்கிறது? அரசியல் கட்சிகளையும் மரக்கிளைகள் என்று எண்ணிக்கொண்டு மாறிமாறித்தாவுகிறார்களே!

—தினகரன்

கே: ராஜாஜி ஏன் காங்கிரசைத் தீவிரமாக எதிர்க்கிறார்?

ப: அவர் காங்கிரசில் இருந்தவர் அல்லவா? சாக்கடையின் நாற்றம் புழுவுக்கு நன்றாகத் தெரியும் அல்லவா?

—தினத்தந்தி

கே: கணவனும் மனைவியும் எழுத்தாளர்கள். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை?

ப; பத்திரிகாசிரியர்! எந்தவிதகஷ்டமுமின்றி அப்பா, அம்மா எழுதுபவற்றைத் தன் பெயரில் வெளியிட்டுக் கொண்டிருக்கலாமல்லவா? —கலைச் செல்வி

கே: பருத்த உடலை மெலியவைக்க வழியுண்டா?

ப: பருத்த உடல் உள்ளவர்கள் உடல்குறைய அமெரிக்க விஞ்ஞானிகள் ஒரு மருந்து கண்டுபிடித்து இருக்கிறார்கள்: இந்த மருந்தை டாக்டர் டீ. ஏ. பட்டிஸ்டா தயாரித்திருக்கிறார். இம்மருந்து கனிரசம் போன்றது. விட்டமின் சத்தோ கொழுப்போ இதில் கிடையாது. பசிக்கும்போது இதைச் சாப்பிட்டால் கொழுத்துப் பருத்திருப்பவர்கள் மெலிந்து விடுவார்கள். ஆனால் இம்மருந்து நம்நாட்டுக்குவர பலகாலம் ஆகும். — கதம்பம்

கே: என் வயிற்றில் இடதுபுறத்தில் எப்பொழுதும் ஒரு வித வலி ஒற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. அதற்கு என்ன செய்யவேண்டும்?

ப: முதலில் ஒரு நல்ல டாக்டரைப்போய்ப்பார்க்க வேண்டும்! — இதையெல்லாம் பத்திரிகையாளரிடம் கேட்பதும், அவர்கள் வைத்தியம் சொல்வதும் இப்போது ஒரு வியாதியாகிவிட்டது! — புதினம்

கே: மச்சம் எந்த இடத்தில் இருப்பது கெடுதல்?

ப: இது கைரேகைக் கேள்வியா? உடல் நலக்கேள்வியா? இதை உடல் நலக் கேல்வியாகவே கொண்டு பதில் சொல்லுகிறேன். இடுப்பு. கன்னம் ஆகிய இரண்டு இடங்களிலும் மச்சம் இருக்கக் கூடாது. இடுப்பில் மச்சம் இருந்தால் வேட்டி, பெல்ட், அரைஞாண் கயிறு ஆகியவைகள் இறுகி அழுத்தி அதைப் புண்ணாக்கி, அப்புறம் அது ஆறாத புண்ணாகிவிடும்! கன்னத்தில் மச்சம் இருந்தால் சவரம் செய்யும் போது கத்திபட்டு, அது பரவிப் பழுத்துக் கன்னத்தேயே கெடுத்துவிடும்! — கல்கண்டு

கே: தமிழ்வாணன் அடுத்ததாக என்ன தயாரிக்கப்போகிறார்?

ப: மருந்து வியாபாரமும், கைரேகை பிஸினஸும் அடியோடு படுத்துவிட்டதால் அடுத்ததாகத் 'தாயத்து' வியாபாரம் துவங்கப் போவதாகக் கேள்வி! —தமிழ் சினிமா.

கே: வாழ்க்கையில் கஷ்ட நஷ்டங்களைத் தாங்க மனிதனுக்குத் தேவையானது எது?

ப: திடசித்தம், நல்வாழ்க்கைத் துணைவி! — நாரதர்.

கே: அறிவு எது? ஆழ்ந்து யோசிப்பதா?

ப: நேர்மையை எண்ணுவது அறிவு. ஆழ்ந்து யோசிப்பது சிந்தனை!

—கரும்பு

'கரேல் செஸ்மன்' கதை

'ரமணன்'

# பெண்களைப் பழி வாங்கி

## 'கொள்கை'க்காகச் சிறை சென்றான்!

கலியோர்னியாவில் இருந்து கொண்டு செஸ்மன் தனது பழிவாங்கும் படலத்தை மிகவும் துரிதமாக நடத்தி வந்தான். அவனது காமவெறிக்கும், துவேஷத்திற்கும் எண்ணற்ற பெண்கள் பலியானார்கள்! பணம் அவனது செய்கைகளுக்கெல்லாம் 'பாவ மன்னிப்பு' அளித்தது! பணத்துக்கு முன்னால் நீதிக்குச் சக்தி ஏது?

செஸ்மன் செய்யும் கொலைகளுக்கெல்லாம் பிரபல வழக்கறிஞர் ஒருவர் ஈடுகொடுத்துவந்தார். இருந்தாலும் ஓரிரண்டு வழக்குகளில் அவனால் தப்பமுடியவில்லை! சில மாதங்கள் சிறைத்தண்டனை கிடைத்தது.

சிறையை செஸ்மன் துச்சமாக மதித்தான். பெரும் தியாகிகள் எப்படித் தம் கொள்கைக்காகச் சிறை சென்று பெருமிதமடைந்தார்களோ, அப்படியே செஸ்மனும் தனது 'கொள்கை'யை நிலை நிறுத்துவதற்காகப் பல முறை சிறைக்குச் சென்றான்!

ஆமாம்! செஸ்மனின் வாழ்க்கையிலும் ஒரு முக்கிய 'கொள்கை' இருந்தது. அதுதான் பெண்களைப் பழி வாங்குவது!

நாளுக்கு நாள் அவனது வெறி அதிகரித்துக்கொண்டே சென்றது. அதற்குக்காரணம் அவனது பழைய நினைவுகள் தான். தன் அருமை அன்னையைப் பற்றிய எண்ணங்கள் அவனை மீண்டும் பற்றிக்கொண்டன. அதனாலேதான் அவனது செய்கைகள் பெண்களைச் சுற்றியே இருந்ததென்று பிற்காலத்தில் பத்திரிகை நிருபர்களிடம் கூறினானும்.

ஒரு முறை இளம் பெண் ஒருத்தி அவன் கையில் சிக்கிக் கொண்டாள். அவள் எவ்வளவோ அழுது மன்றாடியிருக்கிறாள். எந்தப் பலனும் கிடைக்கவில்லை. கடைசியாக அந்தப் பெண் மிகவும் பரிதாபத்துடன் "என் முகத்தில் உன் தாயின் முகத்தைக் காணவில்லையென்றால் என்னை உன் இச்சைக்காகப் பயன்படுத்திக்கொள்!" என்று சொன்னாள். அவ்வளவுதான். செஸ்மனின் உடலெல்லாம் ஒரு முறை அதிர்ந்தது! 'தாய்' என்ற சொல்லுக்கு அத்தனை சக்தி! அந்தப் பெண்ணை எதுவும் செய்யாமல் உரிய இடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து விடான் செஸ்மன்!

ஆனால் பிற்காலத்தில் அவன் தனது தாயை எந்தப் பெண்ணிலும் காணவில்லை. எல்லாப் பெண்களும் அவனது தாயை துன்புறுத்திய பணக்காரச் சீமாட்டியாகவே தோன்றினார்கள். இருந்தாலும் செஸ்மனின் இருதயத்தின் ஒரு பகுதியில் தன்னைப் போன்றோருக்கு இரக்கம் காட்டும் தயாள சிந்தனை இருந்துதான் வந்திருக்கிறது! அதை நிரூபிப்பதற்கான சம்பவமொன்று இதோ—

## பணம் அவனுக்கு 'பாவமன்னிப்பு' அளித்தது!

கலிபோர்னியாவில்மார்லின்பாடோ என்ற ஒரு பெண்மணி வசித்து வந்தாள். அவளது கணவன் திருமணம் செய்து எட்டு மாதங்களுக்குள், தனக்குப் பிறக்கப்போகும் குழந்தையைக் காணமலே ஒரு கார்விபத்தில் மரணமானான்.

ஏழு வருடங்கள் சென்றுவிட்டன. மார்லின் பாடோ தனது குழந்தையுடன் தன் பணக்கார அண்ணன் வீட்டில் வசித்துவந்தாள். மீண்டும் மறுமணம் செய்துகொள்ள அப்பெண்ணின் மனம் இடம் கொடுக்கவில்லை, ஆனால் அவளது துர் அதிர்ஷ்டத்தின் பயனால் அவள் மகனுக்கு ஆறு வயதாகும் பொழுதே செஸ்மனின் கண்ணில் அவள் பட நேர்ந்தது.

ஒருதினம் அவளும், அவளது மகனும் கடற்கரைக்குப் போய் விட்டு வரும் வழியில் ஒரு கார் மிகவும் வேகமாக அவர்கள் காரைப் பின்தொடர்ந்து வந்தது.

மறுகணம்—

'டுமீல்' என்ற ஒரு துப்பாக்கி வெடிச் சத்தம்! பின்னால் வந்துகொண்டிருந்த காரில் இருந்த முகமூடி மனிதன் ஒருவன், முன்னால் சென்று கொண்டிருந்த மார்லின் பாடோவின் கார் டயரை நோக்கிச் சுட்டான்!

காரின் டயர் வெடித்தவுடன் மார்லின்பாடோ வால்காரைத்தொடர்ந்து ஓட்டமுடியவில்லை. கார் நின்றதும் முகமூடி மனிதன் தாயையும் சேயையும் தனது காருக்குள் ஏறுமாறு துப்பாக்கி முனையில் கட்டளையிட்டான். அவர்களால் என்ன செய்யமுடியும்?

மௌனமாக காருக்குள் ஏறவேண்டியதுதானே?

முகமூடி மனிதன் வேறு யாருமல்ல. சாட்சாத் கரேல் செஸ்மனே! செஸ்மன் தனது கொள்கைப்படி 'செய்யவேண்டியதை எல்லாம்' செய்து விட்டு மார்லின் பாடோவை கொலையும் செய்துவிட்டான். ஆனால் அவளது ஆறு வயதுக் குழந்தை வில்சனை மட்டும் ஒன்றும் செய்ய மனம் இடந்தரவில்லை!

அன்றிரவு எட்டுமணியளவில் வில்சன் அழுது கொண்டிருந்ததைப் பார்த்த செஸ்மனுக்கு ஏதோ ஒருவித அனுதாபம் ஏற்பட்டதாம்; அவனைப்பற்றி விசாரித்ததும் செஸ்மனுக்கு 'பகீர்' என்றது.

ஏனெனில் வில்ஸனும் செஸ்மனைப்போல தந்தை அற்றவன். அவனின் தாய் மார்லின் பாடோவினுடைய தமயன்தான் இருவரையும் வைத்துப் பாதுகாத்து வந்தானாகிலும், உண்மையிலே அன்புடன் தனது வீட்டில் வைத்திருக்கவில்லை. அவர்களிடமிருந்த சொத்துத்தான் அவனைக் கவர்ந்தது. சொத்தை அடைய வேண்டுமாகில் எப்படியும் தனது தங்கையை வைத்துப் பாதுகாக்கவேண்டும்தானே? அப்படியானால் இப்பொழுது வில்சனின் நிலை......? நிச்சயமாக செஸ்மன் எப்படித் தனது சிறு வயதில் கஷ்டப்பட்டானோ அப்படியே இவனும் கஷ்டப்படவேண்டும்.

செஸ்மன் வில்சனின் நிலையை எண்ணிப் புழுவாகத் துடித்தான். தற்கொலை செய்துகொள்ளலாமா என்றுகூட அவனுக்குத் தோன்றியது! இச்சம்பவத்தைப் பற்றி செஸ்மன் தனது கைப்பட எழுதிய குறிப்பை அடுத்த வாரம் படியுங்கள்!

# "காதல் கட்டங்களில் நடிப்பதற்கு எனக்கு பயமாக இருக்கிறது!"

## சரோஜாதேவி சொல்லுகிறார்!

"காதல் என்ற வார்த்தையை நினைக்கும் பொழுதே என் மனம் 'பக் பக்' என்று அடித்துக் கொள்கிறது. யாரையும் காதலிப்பதற்கு — நடிப்புக்காகப் படத்தில்தான் என்றாலும் கூட, காதல் என்றாலே எனக்கு உடல் நடுங்குகிறது! இதற்குக்காரணம் இல்லாமல் இல்லை.

என்போன்ற விவாகமாகாத நடிகைகள் படங்களில் ஆண்களோடு சேர்ந்து கணவன் மனைவியாக நடித்தாலும், வெளிஉலக வாழ்க்கையில் அண்ணன் தங்கையைப் போலவே பழகுகிறோம். என்னைப் பொறுத்தவரை, காதலித்த ஒருவரைக்கல்யாணம் செய்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டால், என்னால் அதைத் தாங்கவே முடியாது. இதனால்தான் நடிப்பிலும்கூட காதல் கட்டங்களில் நெருங்கி நடிப்பதற்குப் பயமாக இருக்கின்றது.

சாவித்திரி என் அன்புக்குப் பாத்திரமானவர். அவரை எனது சொந்த சிஸ்டராகவும், ஜெமினிகணேசனை என் சொந்தப் பிரதராகவும் நான் பாவிக்கின்றேன். அப்படியிருந்தும், படங்களில் ஜெமினிகணேசன் என்னுடன் சேர்ந்து நடிப்பது சாவித்திரிக்கு ஏனோ பிடிக்கவில்லை. அவர் தன் எதிர்ப்பைத்தெரிவித்துக்கொண்டதன் காரணமாக என்னுடன் சேர்ந்து நடிப்பதற்குஏற்பாடுசெய்திருந்த பல படங்களின் ஒப்பந்தங்களை ஜெமினி கணேசன் ரத்துச் செய்ய வேண்டியநிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது!

காதல்கட்டங்களில் நடிகைகள் மனம் நெகிழ, உள்ளம் குழைய தத்ரூபமாக நடிப்பதைக் கண்டு ரசிகர்கள் மலைத்துப் போய்விடக்கூடாது. தவறாக அர்த்தம் புரிந்து கொள்ளவும் கூடாது. நாங்களும் ஒருநாளைக்குக் கல்யாணம் செய்து கொண்டு, குடியும் குடித்தனமுமாக வாழப் போகிறவர்கள். எங்களைப் பற்றிப் பத்திரிகை நிருபர்கள் அநியாயமாகத் தாறுமாறாகவிரசமாகஎழுதுவது எங்கள் எதிர்கால வாழ்க்கையைமிகவும்பாதிக்கும்!

ரசிக மகாஜனங்கள் இப்படிப்பட்ட ஆபாசச் செய்திகளை ஆதரிக்காமலிருப்பதுதான், அவர்கள் கலைக்குச்செய்யும் மிகப் பெரிய தொண்டாகும். எனக்கு எப்பொழுதுமே ரசிகர்களிடம் மட்டற்ற மதிப்பும் மரியாதையும் உண்டு. அவர்கள் கடிதம் எழுதினால் கட்டாயம் அவர்களுக்குப் பதில் எழுதுவேன். என் புகைப்படம்கூட அனுப்பிவைப்பேன். அவர்கள் தரும் அமோகமான ஆதரவினால்தானே இன்றுநான் சிறந்த நட்சத்திரமாக மிளிரமுடிகிறது? எனவே, ரசிகர்களுக்கு என்மனமுவந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று நடிகை சரோஜாதேவி கூறினார்.



கட்டுடலும், கொட்டும் விழிகளுமாகத் தோற்றமளிக்கும் தமிழ் நடிகை எம். என். ராஜத்தைக் காணும் பொழுது "கண்களும் கவிபாடுதே..." என்று பாடத்தோன்றுகிறதல்லவா?

## 'மாடப் புறா'

ஸ்ரீதரின் 'தேன்நிலவு' படத்தின்மூலம் பட உலகில்புகுந்து சக்கைப்போடு போடும் புதுமுகம் வசந்திக்குத் திரை உலகில் 'ஸ்டார்' வசமாக வேலை செய்ய ஆரம்பித்து விட்டது! பல படங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளவசந்தி இப்பொழுது பி. வி. என். புரொடக்ஷன்ஸார் தயாரிக்கும் 'மாடப்புறா' என்ற படத்தில் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு ஜோடியாக நடிக்கவிருக்கிறார். இப்படத்தில் எம். என். நம்பியார். குலதெய்வம் ராஜகோபால் முஸ்தபா ஆகிய நடிகர்களும் நடிக்கின்றனர்.

## சாவித்திரி—சரோஜாதேவி தகராறின் எதிரொலி!

தற்போது வேலுமணி தயாரித்துக் கொண்டிருக்கும் படம் ஒன்றில் ஜெமினி கணேசனுடன், சரோஜாதேவி ஜோடியாக நடிப்பதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. சாவித்திரி—சரோஜாதேவி தகராறு முற்றியபின்னர், இப்பொழுது சரோஜதேவிக்குப் பதிலாகசாவித்திரியே ஜெமினி கணேசனுடன் ஜோடியாகநடிப்பதற்கானஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்!

## வேளாங்கன்னி!

இந்தியாவில் கத்தோலிக்கரின் புனித க்ஷேத்திரங்களில் ஒன்றாகத் திகழ்வது வேளாங்கன்னி. இதையே கதையின் பெயராகவைத்துக்கொண்டு டி. ஜானகிராம் ஒரு படம் தயாரிக்கவிருந்தார். பின்னர் அந்த முயற்சியை அவர் கைவிடவே, இப்பொழுதுகுலாலா பிலிம்ஸார் அப்படத்தை தயாரிப்பதற்கான முழுமுயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கான கதையையும் பாடல்களையும் கவிஞர் கம்பதாசன் எழுதுகிறார்.

இப்படத்தில் கதாநாயகியாக நடிப்பதற்குப் புதுமுகம் ஒன்றைத் தயாரிப்பாளர்கள் தேடிக் கொண்டிருக்கின்றனர். அந்தப் புதுமுகம் ஒரு கத்தோலிக்கராகவே இருப்பாராம்!

இப்படத்தை டைரக்ட் செய்யும் பொறுப்பை ஏ. எஸ். ஏ. சாமி ஏற்கவிருக்கிறார். இவரும் ஒரு கத்தோலிக்கர். எனவே, இப்படம்படமாக்கப்பட்டால் வெற்றிக்கொடி நாட்டும் எனப் படவுலக வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

## தீண்டாமையை ஒழிக்கத் திரைப்படம்!

வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய 'சுசீ' என்ற பாடலைத் திரைப்படமாக்கி, இந்தியா முழுவதிலும் திரையிட பிலிம் டிவிஷன் முடிவு செய்துள்ளது. தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் நடத்தும் நோக்கத்துடன் தாகூரின் பாடல் திரைப்படமாக்கப்பட்டுள்ளது.

செருப்புத் தைக்கும் தொழிலாளியாகவிருந்து துறவியாகிப் பணி புரிந்த ரபிதாஸ் என்பவரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் படம் ஒன்றையும் பிலிம் டிவிஷன் தயாரித்துள்ளது.

தீண்டாமை ஒழிப்புநோக்கத்துடனேயே இந்தப் படமும், இன்னும் நான்கு படங்களும் மத்திய சர்க்காரின் உள்துறை இலாகாவால் தயாரிக்கப்பட்டுள்ளன. சாந்தோயக்ய உபநிஷதத்திலிருந்து பிராமணர் 'சங்கரரும் சண்டாளரும்', 'பழைய ஆலமரத்தின் சுயசரிதை' முதலியனவே அத்திரைப்படங்களின் பெயர்கள்.

"வைஷ்ணவ ஜன்" என்ற பெயருள்ள ஒரு திரைப்படத்தை ஒரு தனிப்பட்ட தயாரிப்பாளரிடமிருந்து விலைக்குவாங்கி, கிராமங்களில் திரையிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## பேண்ட் மாஸ்டர் சிக் சிக் பூம்!

பிரபல ஹிந்தி நடிகர் கிஷோர்குமார் தாம் சொந்தமாகத் தயாரிக்கவிருக்கும் படத்தின் ஆரம்ப விழாவை அண்மையில்நடத்தினார், அந்தபடத்திற்கு 'பேண்ட் மாஸ்டர் சிக்சிக் பூம்" என்று பெயர் வைத்துள்ளார். இக்கதையைக் கிஷோர் குமாரே எழுதியதுடன், அவரே இசைப் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார்.

வசனத்தைஎச்.ஏ.ராஹி எழுதுகிறார். ஆர். பட்டாச்சார்யா இப் படத்தை டைரக்ட் செய்யவிருக்கிறார்.

## சிவாஜி கணேசன் நடிப்பைக் கண்டு வ. உ. சி. யின் பேத்தி அழுதார்!

### தூத்துக்குடியில் நடந்த சம்பவம்!

பாரதநாட்டின் விடுதலை இயக்கத்தில் பங்குகொண்டு, இன்னல் பல அனுபவித்த தூத்துக்குடி தேசபக்தர் வ. உ. சிதம்பரனாரின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு "கப்லோட்டிய தமிழன்" என்ற பெயரில் பத்மினி பிக்சர்ஸார் படமாகத் தயாரித்துள்ளது வாசகர்கள் அறிந்ததே.

இந்தப்படம் தூத்துக்குடியில் இப்பொழுது திரையிடப்பட்டுள்ளது. படத்தைப் பார்ப்பதற்காக தேசபக்தர் சிதம்பரனாரின் பேத்தி சேதுலட்சுமியும், அவர்கணவர் நாராயணனும் சென்றிருந்தனர்.

சிறையில் அடைபட்டிருக்கும் சிதம்பரனார் செக்கு இழுக்கும் காட்சியைக் கண்டதும் சேதுலட்சுமிக்குத்துக்கம் தொண்டையை அடைக்க, அழுகை பீரிட்டுக்கொண்டு வந்தது. கண்ணீர் விட்டு உணர்ச்சி வசத்தில் கேவிக்கேவி அழ ஆரம்பித்துவிட்டார்! அருகில் இருந்த அவர் கணவர் ஆறுதல் சொல்லிச் சமாதானம்செய்யவேண்டியதாயிற்று!

இந்தப்படத்தில் சிதம்பரனாராகசிவாஜிகணேசன் தத்ரூபமாக நடித்திருக்கிறாராம்! "அவரைப் பார்க்கும்பொழுது என் தாத்தாவை நேரில் காண்பதைப்போலவே இருக்கிறது. குமாரி ருக்மணியின் தோற்றமும் என் பாட்டியின் தோற்றத்தை அச்சுப்பதித்தாற் போல் அப்படியே இருக்கிறது! அவர் சேலை உடுத்தியிருப்பதும், நகைகள் அணிந்திருப்பதும், நடப்பதும், பேசுவதும் என்பாட்டியே நேரில் வருவதைப்போலிருக்கிறது!" என்று வ. உ. சிதம்பரனாரின் பேத்தி குறிப்பிட்டார்.

# தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ?

உலக சரித்திரத்திலேயே 'அழகிகள்' என வர்ணிக்கப்படும் பலர் தங்கள் அங்க அவயவங்களில் குறை நிறைந்தவர்களாகவே இருந்திருக்கின்றனர்—இன்றும் இருக்கின்றனர்!

உலகப் புகழ் பெற்ற எகிப்து நாட்டின் எழிலரசியான கிளியோ பெட்ராவுக்கு மூக்கு சற்றுப் பெரிதாகவே இருந்ததாம். நெப்போலியனின் அன்புக் காதலியான ஜோஸப்பைனின் வாயிலிருந்து எப்பொழுதும் ஒரு வித துர் நாற்றம் வீசிக்கொண்டேயிருக்குமாம். காரணம், அவளுக்குப் பற்கள் சொத்தை!

இன்று ஹாலிவுட்டின் அழகு நட்சத்திரங்களாக விளங்கும் பிரிகிட்டி பார்டட்டுக்குத் தடித்த உதடுகள்! ஜினா லோலோபிரிகிடாவுக்குக் குட்டையான கழுத்து! மார்லின் மன்ரோவுக்கு சப்பையான முகவாய்க் கட்டை!

அவ்வளவு தூரம் போவானேன்? நம் தமிழ்ப் பட உலகில் இன்று பிரபலமுடன் திகழும் நடிகைகளிடமுள்ள அங்கக் குறைகளைப் பற்றிப் பக்கம் பக்கமா எழுதிக் கொண்டே போகலாம்! அப்படி எழுதுவதாக இருந்தால், ரசிகர்கள் கச்சை கட்டிக்கொண்டு களத்தில் இறங்கி விடுவார்கள். எனவே அதைப்பற்றி வர்ணிக்காமலிருப்பது தான் சிறப்பு!

இவர்கள் எல்லாம் 'அழகிகள்' எனப் பெயர் பெற்றதற்குக் காரணம், தங்களிடமுள்ள குறைகளைப் புரிந்துகொண்டு, அவைகளை மறைக்கும் வண்ணம் 'மேக்—அப்' செய்துகொள்வதுதான்!

## எது புத்தகம்?

பல நாட்டு அரசாங்கங்கள் புத்தகத்துக்கு விதித்திருக்கும் 'இலக்கணம்' தெரியவேண்டுமா?

இந்தியா, இந்தோனேசியா, ருஷியா, போன்ற நாடுகளில் அரசாங்கப்புள்ளி விவரங்களைப் பொறுத்தவரை எந்த வெளியிடும் ஒரு புத்தகந்தான். பெல்ஜியம் நாட்டில் 40 பக்கம் கொண்ட வெளியீட்டைத்தான் புத்தகம் என்று ஒப்புக்கொள்வார்கள். கனடா, நோர்வே, பின்லாந்து நாடுகளில் 40 பக்கம் இருந்தால்தான் அதை ஒரு நூல் என்று கருதுவார்கள். தென் ஆபிரிக்காவிலும் லெபனானிலும் புத்தகம் என்று அழைக்கும் பொருளுக்கு 50 பக்கங்கள் இருக்கவேண்டும். டென்மார்க்கில் 60 பக்கம் இருந்தால்தான் இந்த மதிப்புக் கிடைக்கும். ஹங்கேரியில் அச்சுத்தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சௌகரியமாக இருந்தால்தான் ஒரு வெளியீட்டைப் புத்தகமாகக் கருதுவார்கள். அயர்லாந்திலும் இத்தாலியிலும் 100 பக்கத்துக்குக் குறைந்தது எதுவும் புத்தகம் ஆகாது.

ஐக்கிய அமெரிக்காவில் வியாபார முறையில் விற்பவைதான் நூல்கள். இலவச விநியோக நூல்களும் அரசாங்க வெளியீடுகளும் எத்தனை ஆயிரம் பக்கங்கள் கொண்டிருந்தாலும் 'புத்தகம்' ஆகா. இங்கிலாந்தில் ஆறு பென்னிக்கு மேல் விலை கொடுத்து விற்பனையாகுபவை மட்டுமே 'புத்தகம்' ஆகும்.

## கண்டதும்... கேட்டதும்...

[2-ம் பக்கத்தொடர்ச்சி]

அவசரகால நிலைமை அமுலில் இருக்கும்போது வேலை நிறுத்தம் செய்வது சட்ட விரோதமாகும். அப்படியிருந்தும் இ. போ. ச. ஊழியர்கள் முன்னறிவித்தல் கூடக் கொடுக்காமல் திடீரென்று வேலை நிறுத்த ஆயுதத்தை உபயோகித்திருப்பது அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தையும் தொழிற்சங்கங்களின் அசாதாரண துணிச்சலையும் விளம்பரப்படுத்துவதாயிருக்கின்றது.

—மாயாவி


# தமிழ் மரபு

**உயர் வகுப்புகளுக்கான மொழிநூல்**

முக்கியமாக ஜி. சி. ஈ. வகுப்பு மாணவர் தமிழ்ப்பாஷையைச் சரிவரக் கற்றுத்தேறுவதற்கு மிகவும் சிறந்தநூல் இதுவே.

● சொல் மரபு ● சொற்றொடர் மரபு
● வாக்கிய மரபு ● கட்டுரை மரபு

என நான்கு பிரிவுகளாகப் பிரித்து எழுதப்பட்ட இந்நூலில் சிறந்த விளக்கங்களும் உதாரணங்களும் பயிற்சிகளும் உள்ளன.

அனேக 'மாதிரிக்கட்டுரை'களும், மற்றும் பல கட்டுரைக் குறிப்புகளும் மாணவர்களுக்கு மிக உபயோகமாகும்படி சேர்க்கப்பட்டுள்ளன. மற்றும் சுருக்கப் பயிற்சிகள், மொழிபெயர்ப்புப் பயிற்சிகள் முதலிய அநேக பயிற்சிகள் இந்நூலில் உள்ளன.

ஆசிரியர்: பொன் முத்துக்குமாரன் பி. ஓ. எல்.

விலை ரூபா. 3-50 (தபாற் செலவு வேறு)

விற்பனையாளர்:

ஆனந்தா அச்சகம், புத்தகசாலை

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணம்

முற்றவெளியில்நடைபெறும்

காணிவலில்

16-12-61

சனிக்கிழமை இரவு

சினிமா நடிகர்

பாலாஜி

அவர்களின்

கவர்ச்சியான

நிகழ்ச்சிகளைக்

காணத் தவறாதீர்கள்!


# இத்தால்... சகலரும் அறிவது!

### புஸ் வாணம்!

ரஷ்ய வானவெளி வீரர் ககாரினின் இலங்கை விஜயத்தை வைத்துக்கொண்டு, கட்சிப்பிரசாரத்தைத் திறம்பட நடந்தலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தது, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி. ஆனல் அந்த எண்ணம் ஈடேருமற் போய்விட்டது. அதற்கு ஒரு உதாரணம் இதோ—

ககாரின் யாழ்ப்பாணத்திற்குவருகை தந்த பொழுது, மிகப் பிரபலமான கம்யூனிஸ்ட் பிரமுகர்கள் சிலர் ககாரினைப் பார்ப்பதற்குத் தெரு ஓரங்களில் ஒதுங்கி நின்று திண்டாடினர்கள். அது மட்டுமா? யாழ் நகர மண்டபத்துற்கு முன்னல் இரண்டொரு சிவப்புக் கொடிகள் மட்டும்தான் பறந்தது என்றல் அதன் மதான்என்ன?

கந்தரோடை. —ஐ. தி. சம்பந்தன்

### 'புதினம்' ஒன்றுதான்!

பாரபட்சமில்லாமல் உள்ளதை உள்ளவாறே சொல்லும் ஒரே ஒரு பத்திரிகை புதினம் தான் என்பது மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ முடியாத உண்மை!

ரம்பொடை. —பி. முருகையா.

### பலே பேஷ்!

கடந்த வாரம் 'மட்டக்களப்பான்—யாழ்ப்பணத்தான்' பிரச்சினை பற்றித் தமிழரசுத் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், புதினத்தின் மூலம் கொடுத்த விளக்கமும்; அதற்குப் பொருத்தமாகப் புதினம் ஓவியர் 'மாலா' அவர்கள் வரைந்திருந்த கார்ட்டூனும் அபாரம்!

கொழும்பு. கே. கணேஷ்

### பிடிக்காமல் விட்டது பிழை!

மட்டக்களப்பு எழுத்தாளர் கவி அரங்கில் பங்கு கொள்ளுமாறு செயலாளர், கவிஞர்கட்கு அழைப்பு விடுத்தார். கவி அரங்கில் "கவிஞர்கட்டு இடமளிக்கப்படும்" என்பதை அறிந்த சகலரும் திடீர் கவிஞர்களாக மாறிவிட்டார்கள். எழுதினர்கள், பிடித்தார்கள் செயலாளரை. செயலாளர் பிடித்தார் முது கவிஞர் ஒருவரை. திருத்தினர் கவிதைகளைத் திருத்த முடியவில்லை. கிளித்தார், எறிந்தார், வேறு எழுதினர், கொடுத்தார் .படித்தார்கள் கவிதையை. கவிதையா அது? கானமிர்தம்—கழுதைக்குரல்!

இந்தத் திடீர்க்கவிஞர்களின் தில்லுமுல்லைக் கண்ட உண்மையான இளங்கவிஞர் பலர் ஆமை போல் பின்னுக்குத் தலையை இழுத்துக்கொண்டதைப் பார்த்தேன். பரிதாபப்பட்டேன். நான் கூட செயலாளரைப் பிடித்திருந்தால் ஒரு கவிஞராகியிருக்கலாமல்லவா?

மட்டக்களப்பு. கே. வி. அந்தோனி.

### ஜனப் மஜீத் சவாலை ஏற்ருரா?

கடந்த 10—12—61 புதினம் இதழில் 'இத்தால் சகலரும் அறிவது' என்ற பகுதியில் "என் சவாலை ஏற்பாரா?" என்ற தலைப்பில் ஜனப் எஸ். சமது ஒரு கடிதம் எழுதியிருந்தாரே, அதற்குப் பதில் எழுதி ஜனப் மஜீத் சவாலை ஏற்றுக்கொண்டாரா?—அவ்வளவு துணிவு அவருக்கு எங்கே இருக்கப்போகிறது?

மூதூர், —கே. பக்கீர் தம்பி

### காதல் நியூஸ்!

'அமெரிக்கா போன மந்திரியின் காதல் லீலை' வேறு எந்தப் பத்திரிகையும் தராத நியூஸ். புதினம் புதினம்தான்!

கொழும்பு 11. எம். நடராசா

### அருமை! அற்புதம்!

தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் விளக்கம் அருமை. 'மாலா'வின் கார்ட்டூன் அற்புதம்!

ஏருவூர் —ந. கந்தையா

### வெட்கக்கேடு!

இங்கே உள்ள ஒரு கோயில் முதலாளிக்கும் ஊரிலுள்ள சிலருக்கும் தகராறு; முதலாளி நல்லவரேயொழிய வல்லவரல்லர். அதனல் கோயிலில் அவருடைய உரிமைகளைத் தட்டிப்பறிக்கச் சிலர் முயல்கின்றனர்; இவர்களுக்கிடையில் அகப்பட்டுக்கொண்டு 'பெருமாள்' திண்டாடுகிருர். நடப்பு நாட்டாண்மைகளைக் காட்டுவதற்கு இன்றைய இந்துக் கோவில்களும், அங்கே நடக்கும் திருவிழாக்களும் நிலைக்களமாக விளங்குவது சமூகத்துககே வெட்கக்கேடு.

பொன்னலை. —கலா

### ஆளைத் தெரிகிறது!

'வேலுப்பிள்ளை மாஸ்ட'ரைப் பச்சைப்படியாக அம்பலத்தில் நிறுத்திவிட்டீர்களே!

வவுனியா, — க. சின்னத்துரை

### பல 'கணவன்மாரை' வரிக்கும்

# நிக்கோபார் அழகிகள்!

இந்து மகா சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு தொகுதித் தீவுகளுக்கு நிக்கோபார் தீவுகள் என்று பெயர். அந்தமான் தீவுகளுக்கு அருகில் இவை இருக்கின்றன. இந்தியாவிலிருந்து ஒருகாலத்தில் ஆயுள் காலக் கைதிகளை இங்கே அனுப்பி வந்த விஷயம் நீங்கள் அறிந்திருக்கக்கூடும். அந்தமான் தீவுகளைப் போலவே நிக்கோபார் தீவுகளும் இன்று இந்தியக் குடியரசைச் சேர்ந்ததாகவே இருக்கின்றன. ஆனால் இங்கு வாழும் மக்களைப் பற்றி நன்றாக அறிந்துகொண்டவர்கள் மிகமிகச் சிலரே.

நிக்கோபார் மக்களுக்கென்றே உரிய ஐதீகங்கள் பலவுண்டு. அவர்கள் இரண்டு ஆவிகளில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். 'மா அலாஹா' (சரீரத்தின் ஆவி) என்பது ஒன்று; 'சையா' (இருளின் தேவதை) என்பது மற்றொன்று. முன் கூறியது சரீரத்தில் வாசம் செய்து, இறக்கும் பொழுது உடலைவிட்டுப் பறந்து விடுகிறது. நோயையும் துன்பத்தையும் வருவிக்கும் துர்த்தேவதையாகப் பாவிக்கப்படுவது 'சையா' என்பது. ஒருகொள்ளைநோய் பரவும்போது, அதற்கு இந்தத் துர்த்தேவதையே காரணம் என்று நம்புகிறார்கள்! சில சடங்குகளை நடத்தித் தங்கள் குடிசைகளிலிருந்து 'சையா'வை விரட்டி, சிறுபடகுகள் செய்து அவற்றில் அந்தத் துர்த்தேவதைகளை ஏற்றி அனுப்பி விடுகிறார்கள்! 'சையா' சென்றதும் இரவில் ஒன்று கூடி அதை ஒரு கொண்டாட்டமாக நடத்துகிறார்கள்.

இந்த மக்களுக்குச் சாவு மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும். சவச் சடங்குகள் அதிகச் செலவில் மிக விரிவாக நடைபெறும். பல கஜ நீளமுள்ள நீண்ட துணியால் சவத்தைச் சுற்றுவார்கள். இருதயம் இருக்கும் இடத்தைமட்டும் திறந்து விடுவார்கள். சரீரத்தின் ஆவி பறந்து போகவே அப்படிச் செய்கிறார்களாம்! இறந்துபோனவனின் உடமைகளையும், உறவினர்கள் தந்த வெகுமதிகளையும் சவத்துடன் சேர்த்தே புதைத்துவிடுகிறார்கள். ஏழுநாட்களுக்குப் பிறகு மீண்டும் குழியிலிருந்து பிரேதத்தை எடுத்து, மண்டை ஓடு, எலும்பு இவற்றை அகற்றி, குடும்ப வழிபாட்டுக்காகப் பத்திரப்படுத்திவைப்பார்கள்

தீவுக்குத் தீவு திருமணம் பற்றிய சம்பிரதாயங்கள் மாறுபடுகின்றன. ஆணும் பெண்ணும் நீண்டகாலம் பழகிய பின்னரே சாதாரணமாக விவாகம் நடைபெறுகின்றது: சில தீவுகளில் பெண்ணின் பெற்றோருக்குக் கணவனே ஸ்ரீதனம் தருகிறான். கல்யாணமானபிறகு மணமக்கள் மொட்டையடித்து, மஞ்சள் துணியுடுத்து, விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு குடிசையில் ஏழு நாட்கள் மட்டும் தங்கியிருக்கவேண்டும். அனேகமாக, தம்பதிகள் ஆயுள் மட்டும் இணைந்திருப்பது அபூர்வம்! இருவருமே மனமொப்பிப் பிரிந்து வேறு வேறு துணையை நாடிச் சென்று விடுவார்கள். நம் ஒழுக்கமுறைக்கும், அவர்கள் ஒழுக்கமுறைக்கும், இந்தத் துறையில் பெருத்த வித்தியாசம் உண்டு. நிக்கோபார் பெண் ஒருத்தி எத்தனை கணவன்மாரை வரிக்கிறாளோ, அந்த எண்ணிக்கைக்குத் தகுந்தபடி சமூகத்தில், அவளுடைய அந்தஸ்து உயர்கிறது!

---

தமிழில் உள்ள சிறந்த தினசரிப் பத்திரிகைகளில் ஒன்றான 'தினமணி'யில் ஆசிரியராக இருந்தவர் திரு. டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள். இப்போது "நவசக்தி" என்ற நாளிதழின் ஆசிரியராக இருந்து அதனைத் திறம்பட நடத்தி வருபவர். பத்திரிகைகள் வளர்த்த தமிழைப் பற்றி அவர் அழகாகக் கூறுகிறார்.

## தற்கால தமிழ்ப் பத்திரிகை

"பிரான்சில் ஜெர்மனியர் பருந்துபாய்ச்சல்விமானங்களை உபயோகித்தார்கள்" என்ற செய்தியைத் தமிழ்ப் பத்திரிகைகளில் நீங்கள்படித்திருப்பீர்கள். படிப்பவர்களுக்கு இந்த வாக்கியத்தில் புதிதாக எதுவும் இருப்பதாகத் தெரியாது. ஆனால் பத்திரிகைக்காரர்களுக்குத்தான் அதிலுள்ள கஷ்டம் தெரியும். யுத்தம் நடக்கிற வேகத்தில் எத்தனையோ புதுப்புது வார்த்தைகளும் சொற்றொடர்களும் சிருஷ்டியாகின்றன. இவையெல்லாம் தாய்ப்பாஷைப் பத்திரிகைக்காரர்களின் தலையில் வந்து விழுகின்றன. தந்திகள் எல்லாம் ஆங்கிலத்தில் வருவதால் ஆங்கிலப் பத்திரிகைகளை நடத்துபவர்களுக்கு, மொழிபெயர்க்க வேண்டிய சிரமம் எதுவும் கிடையாது. வந்த வார்த்தைகளை அப்படியே போட்டுவிடலாம். தமிழ்ப் பத்திரிகைகள் அதை மொழி பெயர்த்தாக வேண்டும். சாவகாசமாக யோசித்து ஒருதமிழ் வார்த்தையைக் கண்டுபிடிக்கலாம் என்ற பேச்சுக்கோ இடமில்லை. அன்று வந்த செய்திகள் அன்று மாலை பத்திரிகையில் போயாக வேண்டும்! அதற்குள்ளாக வார்த்தையைக் கண்டுபிடிக்க வேண்டும்: அவ்வளவு அவசரம். எனவே புதிதாக ஒரு வார்த்தை வந்துவிட்டால், பத்திரிகை ஆபீசில் ஏற்படும் பரபரப்பைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஒவ்வொருவரும் மூளையை ஓட்டுவார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொரு வார்த்தையைச் சொல்லுவார்: எல்லாவற்றையும் பார்த்து அவற்றில் எது பொருத்தமானதென்று தோன்றுகிறதோ அது அன்றைய பத்திரிகையில் வரும். Dive Bombers என்ற வார்த்தைக்குப் பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் என்ற தமிழ்ப் பெயரைக்கேட்ட பின்பு, அது பொருத்தமாயிருக்கிறதென்று அநேகர் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் அந்த வார்த்தை பத்திரிகை நிலையங்களில் எவ்வளவு வேலையைக் கொடுத்தது என்பது, வெளியிலுள்ளவர்களுக்குத் தெரியாது. ரஷ்யாவுடன் ஜெர்மனி யுத்தம் ஆரம்பித்தவுடன் scorched Earth Policy என்ற பதங்கள் புதிதாய் உபயோகத்துக்கு வந்தன. இதற்குத்தான் பொசுக்கல் கொள்கை என்ற தமிழ்ப்பதம் அமைக்கப்பட்டது. Succesful Retreat என்ற பதம் யுத்த செய்திகளில் தற்சமயம் தண்ணீர் பட்ட பாடாய் இருக்கிறது. அதற்குத் தமிழ் வார்த்தைகளாக 'வெற்றிகரமான வாபஸ்' என்ற பதத்தை தமிழ் பத்திரிகைகள் உபயோகிக்க ஆரம்பித்தன. இன்று தமிழ்நாடெங்கும் இந்த வெற்றிகரமான வாபஸ் என்ற பதம் சர்வசாதாரணமாக வழங்குகிறது. அதை அறியாதவர்களே இருக்க முடியாது. இம்மாதிரியாகப் பல புது வார்த்தைகளையும், வாக்கியங்களையும், அர்த்தங்களையும் ஏற்படுத்தும் வேலையைத் தமிழ்ப் பத்திரிகைகள் செய்து வருகின்றன. ஆங்கிலம் படிக்காதவர்கள் கூட தமிழ்ப்பத்திரிகைகளைப் படித்து யுத்த செய்திகளின் பொருளை நன்றாகத் தெரிந்து கொள்ளும் வண்ணம், தமிழ்மொழி தற்சமயம் வளர்ந்திருக்கிறது. இதற்கும் பத்திரிகைகளே காரணம்.

---

# இல்லை!

1. அறிவிருக்குத் திறமிருக்கு—இங்கு
அதற்கு வேலை இல்லையே—பின்
அறைக் கதவும் திறந்திருக்கு
அடுத்து வேலை செய்யவே

○

2. கட்சியுண்டு காசுமுண்டு—மன்றக்
கதிரையுண்டு தூங்கவே—நாடு
கஞ்சிக்காகக் கெஞ்சி நின்றால்
கவலை என்பதில்லையே

○

3, கடமையுண்டு உரிமையுண்டு—அதில்
கவனமென்பதில்லையே—இங்கே
காசு பணம் வந்தாலதில்
கழிவும் இழிவுமில்லையே

○

4. வார்த்தை யுண்டு வாயுமுண்டு—செயல்
வளர்ச்சி என்பதில்லையே—வீண்
வம்பு பேசி வசை அளக்க
வருகுதிந்தத் தொல்லையே

○

5. முயற்சியுண்டு மூளையுண்டு—அதை
முட்டாள் காண்பதில்லையே—அதை
மூடிவைத்த போதுமது
முடமாய் போவதில்லையே

○

6. வீரமுண்டு தீரமுண்டு—அது
விளம்பரத்திலில்லையே—வெறும்
வேடம் போட்டு வந்தாலதை
வினவிப் பார்ப்பதில்லையே

○

7. கவிதையுண்டு கதையுமுண்டு—அதில்
கருவும் உருவுமில்லையே—நம்
கையில் பேனை மையிருந்தால்
கருத்தில் தோய்வதில்லையே

○

8. கலையுமுண்டு சிலையுமுண்டு—அதைக்
கண்டுகளிப்பதில்லையே—தினம்
காலையுண்டு மாலையுண்டு
காலம் போக்கல் உண்மையே

○

9. புத்தியுண்டு சக்தியுண்டு—இங்கு
புரியுந்தொழிலுமில்லையே—வாய்த்த
உத்தியோகம் விட்டுத் தேக
உழைப்புச் செய்வதில்லையே

○

10. பட்டமுண்டு பதவியுண்டு—உள்ளப்
பண்பு நம்மிலில்லையே—நல்ல
திட்டமுண்டு திறமையுண்டு—அதை
ஒட்டவைப்பதில்லையே

○

11. குறையுமுண்டு நிறையுமுண்டு—அதைக்
கூர்ந்து பார்ப்பதில்லையே—உயர்
கொள்கையுண்டு குறியுமுண்டு
கொண்டு வாழ்வதில்லையே

○

12. காணியுண்டு பூமியுண்டு—அங்கு
காயும் கனியுமில்லையே—வெறும்
காகிதத்தில் எழுத்திருக்குக்
காட்டிக் காட்டிப் பேசவே

○

13. அணுவுமுண்டு குண்டுமுண்—அதில்
ஆக்க வேலை இல்லையே—வெறும்
அச்ச மூட்டி ஆள் விரட்டும்
அறிக்கை யுண்டு கேட்கவே

○

14. உலகமுண்டு உயிருமுண்டு—இங்கு
ஒன்று கூடி வாழவே—புவிக்
கவலை நீக்கிக் கலகம் போக்கும்
தலைவர் நம்மிலில்லையே

—"ஆரையூர் அமரன்"

Registered as a newspaper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

## நெடுந்தீவில் அபூர்வப் பிறவி!

"32 பிள்ளைகளுள்ள ஒரு வகுப்பில் $\frac{2}{5}$ பங்கு பேர் ஆண்களாயின், பெண்கள் எத்தனைபேர்?"

இது ஒரு கணக்கு. நெடுந்தீவிலுள்ள ஒரு பாடசாலையில் 6ம் வகுப்புக்குக் கொடுக்கப்பட்டது. இதன் சரியான விடை என்ன தெரியுமா? $19\frac{1}{5}$ பெண்கள்!

ஆண் பெண்ணாக மாறுவதைக் கேட்டிருக்கிறோம். $\frac{4}{5}$ பங்கு ஆணாகவும் $\frac{1}{5}$ பங்கு பெண்ணாகவும் ஒரு அபூர்வப் பிறவியைப் படைத்த அந்த ஆசிரியசிகாமணியின் திறமையே திறமை!

G. C. E. இந்து சமய பாடம்

சைவசமய பாடத்திரட்டு
(SAIVAISM)

ஜி. சி. ஈ. பாடத் திட்டத்தில் சமயபாடத்துக்கெனக் குறிப்பிடப்பட்ட எல்லாப் பகுதிகளும் அடங்கிய ஒரே நூல்!

பாடல்களுக்குப் பதவுரை, பொழிப்புரை, விளக்கக் குறிப்புகள் சிறப்பாக அமைக்கப்பெற்றது

- விசேட பயிற்சி வினாக்கள்
- விடைகள்
- அட்டவணைகள்

முதலிய சிறப்புக்கள் சேர்ந்தது.


தொகுத்தவர்கள்:
வித்துவான். பொன். முத்துக்குமாரன் பீ. ஓ. எல்.
பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா

விலை ரூபா 3-50 (தபாற்செலவு வேறு)

விற்பனையாளர்:
ஆனந்தா அச்சகம்—புத்தகசாலை,
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.




## "ஒறிஜினலா, டூப்பிளிக்கேற்ரு?"




சின்னக்குட்டி: '' என்ன... சுருட்டுக் கடைச் சுப்பையா இந்தப் பக்கம் ?

சு. சுப்பையா: ''உங்களைக் காணயில்லையெண்டுதான் ஊரெல்லாம் பேச்சு. 'மக்கலம் றோட்டில்' இருந்தனீங்கள் இப்ப இடம் மாறிவிட்டியளோ.. ?

தம்பர்: ஓ... எங்களுக்கு அங்கை ஒத்துவரயில்லை. ஓரே சூடாக இருந்திச்சு. இப்ப 'கிருண்பாஸ்' பக்கத்திலைதான் தங்கியிருக்கிறம்...

சு. சுப்பையா: ஆனா உங்களைப் போலை வேஷத்தோடை இரண்டு பேர் மக்கலம் றோட்டுப் பக்கத்திலையும் நிக்கினம் போலை தெரியுதே...?

சின்னக்குட்டி: ஓ... அது டூப்ளிகேற்க தம்பரும், சின்னக்குட்டியும்... பொடியனின்ரை விளையாட்டுத் தெரியாதே?

# "ஆயிரம் கேள்வி கேட்பினும் அஞ்சாமல் பதில் கூறுவேன்!"

## யாழ்ப்பாணத்தில் நடிகர் பாலாஜி

யாழ்ப்பாண முற்றவெளியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் களியாட்டு விழாவில் சென்ற 12-12-61 செவ்வாய்க்கிழமை இரவு, பிரபல சினிமா நடிகர் தோன்றி, அங்கு கூடியிருந்த ரசிகர்களின் கேள்விகளுக்குப் சுவாராஸ்யமாகப்பதில்கூறினர்

கவர்ச்சிகரமான தோற்றமும், உல்லாச மனோபாவமும் நிரம்பிய பாலாஜியிடம், ரசிகர்களின் பல வித கேள்விகளும் கேட்கப்பட்டன. ரசிகர்களின் சார்பில் கேள்விகளைக் கேட்டவர் ஒரு சர்ந்தப்பத்தில் "இன்னும் சில கேள்விகள் உள்ளன. தங்களுக்குப் பதில் கூறிக்கொண்டிருப்பதுசிரமமாயிருக்கிறதா?" என்று கேட்டபோது பாலாஜி "ரசிகர்கள் ஆயிரம் கேள்விகளைக் கேட்டாலும் நான் பதில் கூற அஞ்சமாட்டேன். தாராளமாகக் கேளுங்கள்!" என்று உற்சாகத்தோடு கூறினர்.

சினிமா நட்சத்திரங்களுக்கு யாழ்ப்பாணத்துப் 'போஷக'ராக விளங்கும் திரு. கே. வி. சரவணமுத்து அன்றைய நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினர்.

மீண்டும் இதே காணிவலில் 16 — 12 — 61 இல் தான் தோன்றிச் சில ருசிகரமான நிகழ்ச்சிகளில் பங்கு பற்றப் போவதாகக் கூறினர், பாலாஜி.

இப்பொழுது வாங்கலாம்,

ஒரு



ஆனந்தா
திருக்குறட்
கலண்டர்

அதுவே சிறந்தது,
எங்கும் கிடைக்கும்!

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னாலை தி. ச. வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348; தந்தி: 'அச்சகம்'